நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**,** மேலூர்

முன்னிலை**:** செல்வி.த.தென்றல் முத்து**, L.L.M.,**

நீதித்துறை நடுவர்**,** மேலூர்

**2026** ஆம் ஆண்டு மார்ச் மாதம் **16-**ஆம் நாள் புதன்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்**.5/2017**

**CNR.No. TNMD16-000019-2017**

…

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடுபவர் | : | அரசுக்காக சார்பு ஆய்வாளர்<br>அனைத்து மகளிர் காவல்நிலையம்<br>குற்ற எண்.10/2016 |
| குற்றம் சாட்டப்பட்டவர்கள் | : | 1) திருமாள்மணி (வயது 40/2026)<br>த.பெ.பெருமாள்,<br>திருச்சுனை, கருங்காலக்குடி,<br>மேலூர் தாலுகா.<br><br>2) பெருமாள்,<br>த.பெ.தென்னரசு,<br>திருச்சுனை, கருங்காலக்குடி,<br>மேலூர் தாலுகா.<br><br>3) செல்லம்மாள், (வயது 60/2016)<br>க.பெ.பெருமாள்<br>திருச்சுனை, கருங்காலக்குடி,<br>மேலூர் தாலுகா.<br><br>4) சபரி<br>த.பெ.பெருமாள்,<br>திருச்சுனை, கருங்காலக்குடி,<br>மேலூர் தாலுகா |
| குற்றம் முறையிடப்பட்டது | : | 1 முதல் 4 எதிரிகள் மீது பிரிவுகள் 506(i) இ.த.ச மற்றும் 4 of TNPHW Act. |
| குற்றம் வனையப்பட்டது | : | 1 முதல் 3 எதிரிகள் மீது பிரிவுகள் 506(i) இ.த.ச மற்றும் 4 of TNPHW Act-ன் கீழும், 4-ம் எதிரி மீது இ.த.ச பிரிவு 506(i)-ன் கீழும் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளன. |
| எதிரிகள் காவலுக்கு உட்படுத்தப்பட்டநாள் | : | கைது செய்யவில்லை |

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.16 08:29:49 +0530

| | | |
|---|---|---|
| இறுதி அறிக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நாள் | : | 05.01.2017 |
| பல்வகை மனு மற்றும் அதன் முடிவு | : | U/s.70(2) Cr.P.C in Crl.M.P.No.2791 of 2025 = Allowed. |
| முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை நாள் | : | |

| | Chief | Cross |
|---|---|---|
| PW1 | 12.02.2018 | 04.12.2020 |
| PW2 | 12.02.2018 | 04.12.2020 |
| PW3 | 12.02.2018 | 04.12.2020 |
| PW4 | 12.02.2018 | 04.12.2020 |
| PW5 | 12.02.2018 | Nil |
| PW6 | 11.02.2019 | 11.02.2019 |
| PW7 | 11.02.2019 | 11.02.2019 |
| PW8 | 05.05.2025<br>16.12.2025 | 05.05.2025 |

| | | |
|---|---|---|
| குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 313(1) (ஆ)-ன் கீழ் எதிரிகளை விசாரித்த நாள் | : | 18.06.2025<br>17.12.2025 |
| தலைமறைவான எதிரியின் விபரம் மற்றும் ஆஜர் செய்யப்பட்ட விபரம் | : | A4: 11.09.2025 to 08.12.2025 |
| மேல் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை மற்றும் அதன் முடிவு விபரம் | : | Nil |
| தீர்மானம் | : | 1 முதல் 3 எதிரிகள் மீது பிரிவுகள் 506(i) இ.த.ச மற்றும் 4 of TNPHW Act-ன் கீழும், 4-ம் எதிரி மீது இ.த.ச பிரிவு 506(i)-ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானம். |
| தீர்ப்பு | : | முடிவாக, 1 முதல் 3 எதிரிகள் மீது பிரிவுகள் 506(i) இ.த.ச மற்றும் 4 of TNPHW Act-ன் கீழும், 4-ம் எதிரி மீது இ.த.ச பிரிவு 506(1)-ன் கீழும் சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை 1 முதல் 4 எதிரிகளுக்கு அளித்து 1 முதல் 3 எதிரிகள் பிரிவுகள் 506(i) இ.த.ச மற்றும் 4 of |

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.16 08:29:54 +0530

TNPHW Act-ன் கீழும், 4-ம் எதிரி இ.த.ச பிரிவு 506(1)-ன் கீழும் குற்றாவாளிகள் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் 1 முதல் 4 எதிரிகளை விடுதலை செய்து, இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. மேலும் 1 முதல் 4 எதிரிகள் குவிமுச பிரிவு 437(A)ன் கீழ் எழுதிக்கொடுத்துள்ள பிணைப்பத்திரம் 6 மாதங்கள் முடிவடைந்த பின்பு தானாக ரத்தாகிவிடும்.

இவ்வழக்கானது கடந்த 05.01.2017-ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 16.03.2026 அன்று என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.பாலமுருகன் அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>தீர்ப்புரை</u>**:-**

1 முதல் 3 எதிரிகள் மீது பிரிவுகள் 506(i) இ.த.ச மற்றும் 4 of TNPHW Act-ன் கீழும், 4-ம் எதிரி மீது இ.த.ச பிரிவு 506(1)-ன் கீழும் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளன.

**1)** <u>குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்</u> **:**

இவ்வழக்கின் புகார்தாரர் ராஜலெட்சுமி என்பவருக்கும், 1-வது எதிரி திருமால்மணிக்கும் கடந்த 04.04.2012 அன்று சமுத்திராபட்டியில் உள்ள பழனியாண்டவர் கோவிலில் வைத்து திருமணம் நடந்துள்ளது. திருமணத்தின்போது புகார்தாரருக்கு அவரது பெற்றோர் 11 பவுன் தங்க நகையும் அவரது கணவருக்கு 1 1/2 பவுனில் கழுத்து செயின், 1 1/2 பவுனில் பிரேஷ்லெட, Splendor இருசக்கர வாகனம் மற்றும் பிரிஜ், சோகேஷ், பீரோ கட்டில் மெத்தை மற்றும் ரூ.1,00,000/- மதிப்புள்ள வீட்டுசாமான்களை சீதனமாக கொடுத்துள்ளார்கள். 6 மாதங்கள் மட்டுமே சந்தோசமாக வாழ்ந்த நிலையில் 1 முதல் 3 வரையிலான எதிரிகள் புகார்தாரரை பிடிக்கவில்லை என்றும், கருப்பாக இருக்கிறாய் என்றும், உன் முகத்தை பார்க்கவே பிடிக்கவில்லை என்றும், வாதியின் மனம் புண்படும்படி பேசியும், 1, 2 எதிரிகள் நாகரீகம் தெரியாத காட்டுமிராண்டி, நீ என் மகனுக்கு பொருத்தமானவள் இல்லை என்று

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.16 08:29:59 +0530

வாதியை சரிவர சாப்பிடவிடாமலும், குளித்துவிட்டு நல்ல துணி உடுத்தவிடாமலும் பார்க்கும் போதெல்லாம் கருவாநாயே என இழிவு படுத்தியும் உள்ளார்கள். புகார்தாருக்கு பெண் குழந்தை பிறந்த நிலையில் புகார்தாரரின் கணவர் வேறு பெண்களுடன் தகாத உறவு வைத்துக்கொண்டு குடித்துவிட்டு வந்து புகார்தாரரை மீண்டும் அடித்து சித்திரவதை செய்தும், இது பற்றி புகார்தாரர் 1, 2 எதிரிகளான மாமனார் மாமியாரிடம் சொன்னதற்கு ஆம்பளை அப்படித்தான் இருப்பான் கருவாச்சி உன்னைப்பார்க்க எங்களுக்கே சகிக்கவில்லை. அவன் எப்படி உன்னோடு குடும்பம் நடத்துவான். உன்னை தீர்த்துவிட்டு வேறு இடத்தில் எங்கள் மகனுக்கு திருமணம் செய்யப்போகிறோம் என கூறி வாதியை மிரட்டி வந்துள்ளார்கள். மேலும் 1-வது எதிரி புகார்தாரரை குழந்தையை தூக்கிக்கொண்டு உன் பெற்றோர் வீட்டிற்கு போடி என்று ஆபாசமாகத்திட்டி கொடுமைப்படுத்தியும், 1, 2 ஆகிய எதிரிகள் உன்னை அடிச்சு கொன்னால்தாண்டி எங்களுக்கு நிம்மதி என புகார்தாரரை அடித்து வயிற்றில் உதைத்து சேலை ஜாக்கெட்டை கிழித்து அரைநிர்வாணமாக்கி கொடுமைப்படுத்தியுள்ளார்கள். பின்னர் 1 முதல் 3 வரையிலான எதிரிகள் புகார்தாரரை இனிமேல் உன்னை வைத்து வாழமுடியாது என்றும், நீ ஒழுங்காக உன் குழந்தையை தூக்கிக்கொண்டு ஓடிவிடு என்றும், இல்லை என்றால் உன்னையும் உன் குழந்தையையும் கொன்றுவிடுவோம் என கூறி மிரட்டிய குற்றம் புரிந்தவராகிறார்கள் என்று மேலூர் அனைத்து மகளிர் காவல் நிலைய ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2)** இவ்வழக்கு ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.5/2017-ஆக இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு இவ்வழக்கின் 1 முதல் 3 எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இவ்வழக்கின் 1 முதல் 3 எதிரிகள் அழைப்பாணையின் பேரில் நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் குவிமுச பிரிவு 207-ன் கீழான 1 முதல் 3 எதிரிகளுக்கு வழக்கு ஆவணங்கள் அனைத்தும் இலவசமாக வழங்கி, போதிய அவகாசம் கொடுத்து, 1 முதல் 3 எதிரிகள் மீது பிரிவுகள் 506(i) இ.த.ச மற்றும் 4 of TNPHW Act-ன் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்டுள்ளது. மேற்படி குற்றச்சாட்டுக்களுக்கு போதிய முகாந்திரம் இருந்ததால் 04.01.2018 அன்று 1 முதல் 3 எதிரிகள் மீது குற்றச்சாட்டுகள் வனைந்து தமிழில் வாசித்து விளக்கி கேட்டபோது 1 முதல் 3 எதிரிகள் குற்றத்தை மறுத்துரைத்துள்ளார்கள். 29.12.2020-ம் தேதி அ.சா.1-ன் சாட்சியத்தின் அடிப்படையில் 4-ம் எதிரி சபரி என்பவரும் குற்ற செயலில் ஈடுபட்டதாக இந்நீதிமன்றம் கருதி அவரை இவ்வழக்கில் கு.வி.மு.ச பிரிவு 319-ன் கீழ் தன்னிச்சையாக எடுக்கப்பட்டு, இவ்வழக்கில் சபரியை 4-ம் எதிரியாக இந்நீதிமன்றம்

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.16 08:30:04 +0530

சேர்த்துள்ளது. அதன் பின்னர் நீதிமன்ற அழைப்பாணையின்படி 28.07.2021-ம் தேதி 4-ம் எதிரி சபரி ஆஜராகி நகல் கொடுக்கப்பட்டு அதன் பின்னர் 13.08.2021-ம் தேதி 4-ம் எதிரி மீது பிரிவு 506(i) இ.த.ச-ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. மேற்படி குற்றச்சாட்டுக்கு போதிய முகாந்திரம் இருந்ததால் 4-ம் எதிரி மீது குற்றச்சாட்டு வனைந்து தமிழில் வாசித்து விளக்கி கேட்டபோது 4-ம் எதிரி குற்றத்தை மறுத்துரைத்துள்ளார். எனவே வழக்கு அரசு தரப்பு சாட்சிக்காக ஒத்திவைக்கப்பட்டது.

**3)** அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.3 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. வழக்கு விசாரணையின் போது, அ.சா.1-ன் மூலம் அ.சா.ஆ.1-ம், அ.சா.8-ன் மூலம் அ.சா.ஆ.2 மற்றும் அ.சா.ஆ.3 ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. 1 முதல் 4 எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை.

**4) அரசு தரப்பில் சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து தெரியவரும் வழக்கின் சுருக்கம் :-**

**4.1)** அ.சா.1 ராஜலெட்சுமி தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரி தன் கணவர் என்றும், 2, 3 எதிரிகள் மாமனார் மற்றும் மாமியார் என்றும், 2012ம் வருடம் 4வது மாதம் ஒருநாள் சமுத்திரப்பட்டியிலுள்ள முருகன் கோவிலில் வைத்து தனக்கும் 1ம் எதிரிக்கும் திருமணம் நடந்தது என்றும், திருமனத்தின்போது தனக்கு 11 பவுனும், தன் கணவருக்கு 3 பவுனும், ஹீரோஹோண்டா இருசக்கர வாகனம், பிரிட்ஜ் போன்ற ஒரு லட்சம் ரூபாய் சீர்வரிசை சாமான்களை தனது பெற்றோர்கள் கொடுத்தார்கள் என்றும், 6 மாதங்கள் மட்டும் தான் தனது கணவருடன் சந்தோசமாக வாழ்ந்தேன் என்றும், பிறகு தனது வளைகாப்பிற்காக பெற்றோரின் வீட்டிற்கு அழைத்துச்சென்றார்கள் என்றும், பிறகு குழந்தை பிறந்த பிறகு ஒரு வருடங்களாக எதிரிகள் யாரும் வராததால் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கச்சென்றதாகவும், அப்போது தனது மாமனார் சமாதானப்படுத்தி அவர் வீட்டிற்கு அழைத்துச்சென்றார் என்றும்அங்கு எதிரிகள் அனைவரும் தனக்கு சாப்பாடு கொடுக்காமலும், குளிக்கவிடாமலும், நல்ல சேலை கட்டவிடாமலும், நீ கருவாச்சியாக இருக்கிறாய் உன்னை எங்களுக்கு பிடிக்கவில்லை என்றும், தகள் மகனுக்கும் பிடிக்காது என்று சொல்லி தன்னை குழந்தையுடன் தன் பெற்றோர் வீட்டிற்கு செல்லுமாறும், தனது மகனுக்கு வேறு ஒரு திருமணம் செய்யவேண்டும் என்று அடித்து கொடுமைப்படுத்தினார்கள் என்றும், பிறகு தான் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்றும், புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்றும், புகார் மனு அ.சா.ஆ.1

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.16 08:30:10 +0530

என்றும், போலீசார் தன்னை விசாரித்தனர் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.2)** அ.சா.2 ராமமூர்த்தி தனது சாட்சியத்தில் அ.சா.1 தனது மகள் என்றும், ஆஜர் எதிரி தன் மருமகன், 2, 3 எதிரிகள் தனது சம்மந்திகள் என்றும், 2012ம் வருடம் பங்குனி 22ம் தேதி சமுத்திரப்பட்டியிலுள்ள பழனியாண்டவர் கோவிலில் வைத்து தனது மகளுக்கும் 1ம் எதிரிக்கும் திருமணம் நடந்ததாகவும், திருமணத்தின்போது தனது மகளுக்கு 11 பவுனும், மாப்பிள்ளைக்கு 3 பவுனும். ஹீரோஹோண்டா இருசக்கர வாகனம், பிரிட்ஜ், கட்டில், மெத்தை போன்ற ஒரு லட்சம் ரூபாய் சீர்வரிசை சாமான்களை தாங்கள் கொடுத்ததாகவும், திருமணமாகி ஒரு வருடத்திற்கு பிறகு தனது மகள் கருப்பாக இருப்பதாலும், சமைக்க தெரியவில்லை என்று சொல்லி தனது வீட்டிற்கு அனுப்பிவைத்துவிட்டார்கள் என்றும், அவரிடம் சென்று நான் பேசியதன் பேரில் தனிக்குடித்தனமாக ஒரு வருடம் மட்டும் வைத்து வாழ்ந்தார் என்றும், பிறகு என் மகளை சுத்தமாக பிடிக்கவே இல்லை என்று கூறி குழந்தையுடன் சேர்த்து அடித்து விரட்டிவிட்டார்கள் என்றும், அதன்பிறகு காவல்நிலையம் சென்று புகார்கொடுத்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.3)** அ.சா.3 மகேஸ்வரி தனது சாட்சியத்தில், அ.சா.1 தனது மகள், அ.சா.2 என் கணவர், 2, 3 எதிரிகள் எனது சம்மந்திகள், எதிரி என் மருமகன் என்றும், 2012 வருடம் பங்குனி 22ம் தேதி தனது மகளுக்கும் 1ம் எதிரிக்கும் சமுத்திப்பட்டியிலுள்ள பழனியாண்டவர் கோவிலில் வைத்து திருமணம் நடந்தது என்றும், திருமணத்தின்போது என் மகளுக்கு 11 பவுனும், மாப்பிள்ளைக்கு 3 பவுனும், ஹீரோஹோண்டா இருசக்கர வாகனம், பிரிட்ஜ். கட்டில், மெத்தை போன்ற ஒரு லட்சம் ரூபாய் சீர்வரிசை சாமான்களை தாங்கள் கொடுத்ததாகவும், திருமணத்திற்கு பிறகு 6 மாதங்கள் ஒற்றுமையாக வாழ்ந்தார்கள் என்றும்பிறகு வளைகாப்பு நடத்திவிட்டு தங்கள் வீட்டிற்கு அழைத்து வந்ததாகவும், அதிலிருந்து குழந்தை பிறந்த ஒரு வருடம் வரைக்கும் எதிரிகள் யாரும் பார்க்க வரவே இல்லை என்றும், அதன்பிறகு சமாதானப்படுத்தி குழந்தையுடன் அழைத்துச்சென்றார்கள் என்றும், தன் மகளை கருவாச்சியாக இருக்கிறாய் என்றும், பேய்மாதிரி சாப்பிடுகிறாய் என்றும் சொல்லி அடித்து கொடுமைப்படுத்தினார்கள் என்றும், இந்தசம்பவத்தை தனது மகள் தங்களிடம் சொன்னதாகவும், பின்னர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.4)** அ.சா.4 ஜெயராமன் தனது சாட்சியத்தில், அ.சா.1, எதிரிகளை தெரியும் என்றும், 2012ம் வருடம் ஒருநாள் சமுத்திரப்பட்டியிலுள்ள பழனியாண்டவர் முருகன் கோயிலில் வைத்து

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY Date: 2026.03.16 08:30:15 +0530

1ம் எதிரிக்கும், அ.சா.1க்கும் திருமணம் நடந்தததாகவும், திருமணத்திற்கு இருசக்கர வாகனம் மற்றும் பண்டபாத்திரங்கள் சீர்வரிசையாக கொடுத்தார்கள் என்றும், திருமணமாகி 6 மாதத்திற்கு பிறகு வளைகாப்பிற்கு அ.சா.1ஐ அவரது பெற்றோர் வீட்டிற்கு அழைத்து வந்தார்கள் என்றும், குழந்தை பிறந்தபிறகு எதிரிகள் பார்க்கவரவில்லை என்றும், பறிகு பஞ்சாயத்து பேசி அ.சா.1ஐ அழைத்து சென்றார்கள் என்றும், பிறகு ஒரு மாதம் கழித்து அ.சா.1ஐ வேண்டாம் என்று எதிரிகள் அனுப்பி வைத்துவிட்டார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.5)** அ.சா.5 ராமசாமி தனது சாட்சியத்தில், அ.சா.1, எதிரிகளை தெரியும் என்றும், 2012ம் வருடம் சமுத்திரப்பட்டியிலுள்ள பழனியாண்டவர் முருகன் கோயிலில் வைத்து 1ம் எதிரிக்கும், அ.சா.1க்கும் திருமணம் நடந்தததாகவும், திருமணத்திற்கு அ.சா.1க்கு 11 பவுன் நகையும், 1வது எதிரிக்கு 3 பவுன் நகையும், இருசக்கர வாகனம் மற்றும் பண்டபாத்திரங்கள் சீர்வரிசையாக கொடுத்தார்கள் என்றும், அவர்களுக்கு ஒரு பெண்குழந்தை உள்ளதாகவும், அ.சா.1 கருப்பாக இருப்பதால் 1ம் எதிரிக்கு பிடிக்கவில்லை என சண்டைபோட்டு பிரிந்துவிட்டார்கள் என்றும்,

**4.6)** அ.சா.6 இந்திரன் தனது சாட்சியத்தில், அ.சா.1, எதிரிகளை தெரியும் என்றும், 5 அல்லது 6 வருடங்களுக்கு முன்பாக அ.சா.1க்கும் 1வது எதிரிக்கும் திருமணம் நடந்தது என்றும், திருமணத்தின்போது அ.சா.1க்கு அவரது பெற்றோர் 14 பவுன் நகையும், ஒரு இருசக்கர வாகனமும் மற்றும் பண்டபாத்திரங்கள் சீதனமாக கொடுத்ததாகவும், பிறகு அவர்களுக்கு பெண் குழந்தை பிறந்ததாகவும், பிறகு அ.சா.1ன் நடவடிக்கை சரியில்லை என்றும், கருப்பாக இருப்பதாகவும் அவர்களுக்குள் அடிக்கடி சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள் என்றும், சண்டை போட்டு அ.சா.1ஐ பிறகு அவரது பெற்றோர் வீட்டில் கொண்டுவந்து விட்டுவிட்டுச்சென்றார்கள் என்றும், அது விசயமாக பஞ்சாயத்து நடந்ததாகவும், போலீசார் தன்னை விசாரித்தனர் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.7)** அ.சா.7 பஞ்சு தனது சாட்சியத்தில் அ.சா.1-ஐ தனக்கு தெரியும் என்றும், எதிரியை தனக்கு தெரியும் என்றும், அ.சா.1 தனது அண்ணன் வீட்டில் வாடகைக்கு குடியிருந்தார் என்றும், சுமார் 2 வருடம் இருந்தார் என்றும், வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும் சாட்சியம் அளித்து பிறழ் சாட்சி ஆகியுள்ளார்.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.16 08:30:19 +0530

**4.8)** அ.சா.8 அம்பிகா தனது சாட்சியத்தில் கடந்த 15.02.2014 அன்று 14.30 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது ராஜலெட்சுமி என்பவர் மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து தொலைபேசி மூலம் தகவலை பெற்று பின்னர் காவல்நிலையம் வந்து புகார் கொடுத்ததன் பேரில் குற்ற எண்.10/16, பிரிவுகள் பெண்கள் துன்புறுத்தலை தடுக்கும் சட்டபிரிவு 4 மற்றும் இ.த.ச பிரிவு 506(1)-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார் என்றும், பின்னர் முதல் தகவல் அறிக்கையுடன் புகாரினை இனைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார் என்றும், பின்னர் சம்பவ இடம் சென்று சாட்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், எதிரியை நீக்கம் செய்து எதிரி நீக்கல் அறிக்கை தாக்கல் செய்தார் என்றும், பின்னர் எதிரிகள் மீது 20.03.2016-ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**5)** குற்றவியல் விசாரணை சட்டப்பிரிவு **313(1)(ஆ)-**ன் கீழான விசாரணை

அரசு தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்டதற்கு பின்னால் பதிவு செய்யப்பட்ட சாட்சிகளின் விசாரணையிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகளை குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)-ன் கீழ் குற்றம்சாட்டப்பட்டவர்களிடம் எடுத்துக்கூறி விளக்கி வினவியபோது 1 முதல் 4 எதிரிகள் பொய் சாட்சியம் என்று அரசு தரப்பு சாட்சிகளை மறுத்துவிட்டார்கள். மேலும் அவர்கள் தரப்பில் சாட்சிகள் உண்டா என வினவியபோது சாட்சிகள் இல்லை என்று சொன்னார்கள். அதனால் 1 முதல் 4 எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை என்று சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

**6)** அரசு தரப்பு வாதம் பின்வருமாறு**:**

அரசு தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் 1 முதல் 4 எதிரிகள் தான் குற்றம் புரிந்துள்ளார்கள் என்று சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவும், 1 முதல் 4 எதிரிகள் மீது உள்ள குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும், எனவே 1 முதல் 4 எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்குமாறு எடுத்துரைத்தார்.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.16 08:30:24 +0530

**7) 1** முதல் **4** எதிரிகள் தரப்பில் வாதம் பின்வருமாறு**:**

1 முதல் 4 எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் இவ்வழக்கில் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் அரசு தரப்பு வழக்கை உறுதிபடுத்தும் வகையில் இல்லை என்றும், எனவே 1 முதல் 4 எதிரிகள் மீது உள்ள குற்றம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், சந்தேகத்தின் பலனை 1 முதல் 4 எதிரிகளுக்கு வழங்கி 1 முதல் 4 எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

**8)** தீர்வு **:-**

இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அனைத்து வழக்காவணங்களும் பரிசீலனை செய்யப்பட்டது.

**9)** அரசு தரப்பு வழக்குப்படி, புகார்தாரர் ராஜலெட்சுமி என்பவருக்கும், 1-வது எதிரி திருமால்மணிக்கும் கடந்த 04.04.2012 அன்று சமுத்திராபட்டியில் உள்ள பழனியாண்டவர் கோவிலில் வைத்து திருமணம் நடந்துள்ளது. திருமணத்தின்போது புகார்தாரருக்கு அவரது பெற்றோர் 11 பவுன் தங்க நகையும் அவரது கணவருக்கு 1 1/2 பவுனில் கழுத்து செயின், 1 1/2 பவுனில் பிரேஷ்லெட, Splendor இருசக்கர வாகனம் மற்றும் பிரிஜ், சோகேஷ், பீரோ கட்டில் மெத்தை மற்றும் ரூ.1,00,000/- மதிப்புள்ள வீட்டுசாமான்களை சீதனமாக கொடுத்துள்ளார்கள். 6 மாதங்கள் மட்டுமே சந்தோசமாக வாழ்ந்த நிலையில் 1 முதுல் 3 வரையிலான எதிரிகள் புகார்தாரரை பிடிக்கவில்லை என்றும், கருப்பாக இருக்கிறாய் என்றும், உன் முகத்தை பார்க்கவே பிடிக்கவில்லை என்றும், வாதியின் மனம் புண்படும்படி பேசியும், 1, 2 எதிரிகள் நாகரீகம் தெரியாத காட்டுமிராண்டி, நீ என் மகனுக்கு பொருத்தமானவள் இல்லை என்று வாதியை சரிவர சாப்பிடவிடாமலும், குளித்துவிட்டு நல்ல துணி உடுத்தவிடாமலும் பார்க்கும் போதெல்லாம் கருவாநாயே என இழிவு படுத்தியும் உள்ளார்கள். புகார்தாருக்கு பெண் குழந்தை பிறந்த நிலையில் புகார்தாரரின் கணவர் வேறு பெண்களுடன் தகாத உறவு வைத்துக்கொண்டு குடித்துவிட்டு வந்து புகார்தாரரை மீண்டும் அடித்து சித்திரவதை செய்தும், இது பற்றி புகார்தாரர் 1, 2 எதிரிகளான மாமனார் மாமியாரிடம் சொன்னதற்கு ஆம்பளை அப்படித்தான் இருப்பான் கருவாச்சி உன்னைப்பார்க்க எங்களுக்கே சகிக்கவில்லை. அவன் எப்படி உன்னோடு குடும்பம் நடத்துவான். உன்னை தீர்த்துவிட்டு வேறு இடத்தில் எங்கள் மகனுக்கு திருமணம் செய்யப்போகிறோம் என கூறி வாதியை மிரட்டி வந்துள்ளார்கள். மேலும் 1-வது எதிரி புகார்தாரரை குழந்தையை தூக்கிக்கொண்டு உன் பெற்றோர் வீட்டிற்கு போடி என்று ஆபாசமாகத்திட்டி கொடுமைப்படுத்தியும், 1, 2 ஆகிய எதிரிகள் உன்னை அடிச்சு

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.16 08:30:29 +0530

கொன்னால்தாண்டி எங்களுக்கு நிம்மதி என புகார்தாரரை அடித்து வயிற்றில் உதைத்து சேலை ஜாக்கெட்டை கிழித்து அரைநிர்வாணமாக்கி கொடுமைப்படுத்தியுள்ளார்கள். பின்னர் 1 முதல் 3 வரையிலான எதிரிகள் புகார்தாரரை இனிமேல் உன்னை வைத்து வாழமுடியாது என்றும், நீ ஒழுங்காக உன் குழந்தையை தூக்கிக்கொண்டு ஓடிவிடு என்றும், இல்லை என்றால் உன்னையும் உன் குழந்தையையும் கொன்றுவிடுவோம் என கூறி மிரட்டிய குற்றம் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

**10)** அ.சா.1 ராஜலெட்சுமி தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரி தன் கணவர் என்றும், 2, 3 எதிரிகள் மாமனார் மற்றும் மாமியார் என்றும், 2012ம் வருடம் 4-வது மாதம் ஒருநாள் சமுத்திரப்பட்டியிலுள்ள முருகன் கோவிலில் வைத்து தனக்கும் 1ம் எதிரிக்கும் திருமணம் நடந்தது என்றும், திருமனத்தின்போது தனக்கு 11 பவுனும், தன் கணவருக்கு 3 பவுனும், ஹீரோஹோண்டா இருசக்கர வாகனம், பிரிட்ஜ் போன்ற ஒரு லட்சம் ரூபாய் சீர்வரிசை சாமான்களை தனது பெற்றோர்கள் கொடுத்தார்கள் என்றும், 6 மாதங்கள் மட்டும் தான் தனது கணவருடன் சந்தோசமாக வாழ்ந்தேன் என்றும், பிறகு தனது வளைகாப்பிற்காக பெற்றோரின் வீட்டிற்கு அழைத்துச்சென்றார்கள் என்றும், பிறகு குழந்தை பிறந்த பிறகு ஒரு வருடங்களாக எதிரிகள் யாரும் வராததால் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கச்சென்றதாகவும், அப்போது தனது மாமனார் சமாதானப்படுத்தி அவர் வீட்டிற்கு அழைத்துச்சென்றார் என்றும்அங்கு எதிரிகள் அனைவரும் தனக்கு சாப்பாடு கொடுக்காமலும், குளிக்கவிடாமலும், நல்ல சேலை கட்டவிடாமலும், நீ கருவாச்சியாக இருக்கிறாய் உன்னை எங்களுக்கு பிடிக்கவில்லை என்றும், தகள் மகனுக்கும் பிடிக்காது என்று சொல்லி தன்னை குழந்தையுடன் தன் பெற்றோர் வீட்டிற்கு செல்லுமாறும், தனது மகனுக்கு வேறு ஒரு திருமணம் செய்யவேண்டும் என்று அடித்து கொடுமைப்படுத்தினார்கள் என்றும், பிறகு தான் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன் என்றும், புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்றும், புகார் மனு அ.சா.ஆ.1 என்றும், போலீசார் தன்னை விசாரித்தனர் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**11)** அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் "நான் என்னுடைய முதல் விசாரணையில் என் வளைகாப்பிற்காக என் பெற்றோர் வீட்டிற்கு அழைத்துச்சென்றார்கள் என்று சொல்லியிருப்பது பொய் என்றால் சரிதான். (சாட்சி மீண்டும் முதலில் அடித்து அப்பாவீட்டில் கொண்டுபோய் விட்டார்கள் என்றும், பின்னர் மீண்டும் வளைகாப்பிற்காக கணவர் வீட்டிற்கு அழைத்து வந்தார்கள் என்றும் கூறுகிறார்)". என்று குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். அ.சா.ஆ.1-ல் புகார்தாரர் தான் அழுதி கதறியதை பொருட்படுத்தாமல்

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.16 08:30:35 +0530

எதிரிகள் தன்னையும், தனது குழந்தையையும் என் பெற்றோர் வீட்டிற்கு போ என வெளியே விரட்டிவிட்டார்கள் என்று புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இவ்வழக்கில் அ.சா.1-ஐ எதிரிகள் கொடுமைப்படுத்தி வீட்டை விட்டு வெளியேற்றினார்களா அல்லது அவர் தனது வளைகாப்பிற்காக தனது பெற்றோர் வீட்டிற்கு சென்றாரா என்று அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அ.சா.1-ன் மூலம் நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**12)** அ.சா.2 ராமமூர்த்தி தனது சாட்சியத்தில் அ.சா.1 தனது மகள் என்றும், ஆஜர் எதிரி தன் மருமகன், 2, 3 எதிரிகள் தனது சம்மந்திகள் என்றும், 2012-ம் வருடம் பங்குனி 22-ம் தேதி சமுத்திரப்பட்டியிலுள்ள பழனியாண்டவர் கோவிலில் வைத்து தனது மகளுக்கும் 1ம் எதிரிக்கும் திருமணம் நடந்ததாகவும், திருமணத்தின்போது தனது மகளுக்கு 11 பவுனும், மாப்பிள்ளைக்கு 3 பவுனும். ஹீரோஹோண்டா இருசக்கர வாகனம், பிரிட்ஜ், கட்டில், மெத்தை போன்ற ஒரு லட்சம் ரூபாய் சீர்வரிசை சாமான்களை தாங்கள் கொடுத்ததாகவும், திருமணமாகி ஒரு வருடத்திற்கு பிறகு தனது மகள் கருப்பாக இருப்பதாலும், சமைக்க தெரியவில்லை என்று சொல்லி தனது வீட்டிற்கு அனுப்பிவைத்துவிட்டார்கள் என்றும், அவரிடம் சென்று நான் பேசியதன் பேரில் தனிக்குடித்தனமாக ஒரு வருடம் மட்டும் வைத்து வாழ்ந்தார் என்றும், பிறகு என் மகளை சுத்தமாக பிடிக்கவே இல்லை என்று கூறி குழந்தையுடன் சேர்த்து அடித்து விரட்டிவிட்டார்கள் என்றும், அதன்பிறகு காவல்நிலையம் சென்று புகார்கொடுத்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ளது போல் அ.சா.1-ஐ அடித்து கொடுமைப்படுத்தி கொலைமிட்டல் விடுத்ததை அ.சா.2 நேரடியாக பார்த்ததாக சாட்சியம் அளிக்கவில்லை.

**13)** அ.சா.3 மகேஸ்வரி தனது சாட்சியத்தில், அ.சா.1 தனது மகள், அ.சா.2 என் கணவர், 2, 3 எதிரிகள் எனது சம்மந்திகள், எதிரி என் மருமகன் என்றும், 2012 வருடம் பங்குனி 22ம் தேதி தனது மகளுக்கும் 1ம் எதிரிக்கும் சமுத்திப்பட்டியிலுள்ள பழனியாண்டவர் கோவிலில் வைத்து திருமணம் நடந்தது என்றும், திருமணத்தின்போது என் மகளுக்கு 11 பவுனும், மாப்பிள்ளைக்கு 3 பவுனும், ஹீரோஹோண்டா இருசக்கர வாகனம், பிரிட்ஜ். கட்டில், மெத்தை போன்ற ஒரு லட்சம் ரூபாய் சீர்வரிசை சாமான்களை தாங்கள் கொடுத்ததாகவும், திருமணத்திற்கு பிறகு 6 மாதங்கள் ஒற்றுமையாக வாழ்ந்தார்கள் என்றும், பிறகு வளைகாப்பு நடத்திவிட்டு தங்கள் வீட்டிற்கு அழைத்து வந்ததாகவும், அதிலிருந்து குழந்தை பிறந்த ஒரு வருடம் வரைக்கும் எதிரிகள் யாரும் பார்க்க வரவே இல்லை என்றும், அதன்பிறகு சமாதானப்படுத்தி குழந்தையுடன் அழைத்துச்சென்றார்கள் என்றும், தன் மகளை

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.16 08:30:39 +0530

கருவாச்சியாக இருக்கிறாய் என்றும், பேய்மாதிரி சாப்பிடுகிறாய் என்றும் சொல்லி அடித்து கொடுமைப்படுத்தினார்கள் என்றும், இந்தசம்பவத்தை தனது மகள் தங்களிடம் சொன்னதாகவும், பின்னர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3-ன் சாட்சியத்தின் அடிப்படையில் அ.சா.1-ஐ எதிரிகள் கொடுமைப்படுத்திய விபரத்தை அ.சா.1 சொல்லி தான் அ.சா.3-க்கு தெரியவந்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார். எனவே அ.சா.3 இவ்வழக்கில் கேள்விபட்ட சாட்சியாகவே கருதப்படுகிறார்.

**14)** அ.சா.4 ஜெயராமன் தனது சாட்சியத்தில், அ.சா.1, எதிரிகளை தெரியும் என்றும், 2012ம் வருடம் ஒருநாள் சமுத்திரப்பட்டியிலுள்ள பழனியாண்டவர் முருகன் கோயிலில் வைத்து 1ம் எதிரிக்கும், அ.சா.1க்கும் திருமணம் நடந்ததாகவும், திருமணத்திற்கு இருசக்கர வாகனம் மற்றும் பண்டபாத்திரங்கள் சீர்வரிசையாக கொடுத்தார்கள் என்றும், திருமணமாகி 6 மாதத்திற்கு பிறகு வளைகாப்பிற்கு அ.சா.1-ஐ அவரது பெற்றோர் வீட்டிற்கு அழைத்து வந்தார்கள் என்றும், குழந்தை பிறந்தபிறகு எதிரிகள் பார்க்கவரவில்லை என்றும், பறிகு பஞ்சாயத்து பேசி அ.சா.1ஐ அழைத்து சென்றார்கள் என்றும், பிறகு ஒரு மாதம் கழித்து அ.சா.1ஐ வேண்டாம் என்று எதிரிகள் அனுப்பி வைத்துவிட்டார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.4-ன் சாட்சியத்தினை பரிசீலனை செய்ததில் அவர் அ.சா.1-ஐ எதிரிகள் கொடுமைப்படுத்தி கொலைமிரட்டல் விடுத்ததை நேரடியாக பார்த்ததாக எந்த சாட்சியமும் இல்லை. அவர் 1-ம் எதிரிக்கும், அ.சா.1-க்கும் நடந்த திருமணம் பற்றியும், வளைகாப்பு பற்றி மட்டும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அவர் தனது சாட்சியத்தில் ஒரு மாதம் கழித்து 1-ம் எதிரி அ.சா.1-ஐ வேண்டாம் என்று சொல்லி அனுப்பி வைத்துவிட்டதாகவும், அதன் பின்னர் நடந்த விபரம் தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே இவர் அரசு தரப்பு வழக்கின்படி எதிரிகள் அ.சா.1-ஐ அடித்து கொடுமைப்படுத்தி அவருக்கு கொலைமிரட்டல் விடுத்தது குறித்து எந்த சாட்சியமும் அளிக்கவில்லை. மேலும் அவர் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் "வழக்கு சம்பவங்கள் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் அந்த விஷயத்தை பொறுத்து அ.சா.1-ன் அப்பா என்னிடம் கூறி நான் நாட்டாமை என்பதால் பலமுறை பஞ்சாயத்து செய்துள்ளோம்.” என்று குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். எனவே அ.சா.4 கேள்விபட்ட சாட்சியாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**15)** அ.சா.5 ராமசாமி தனது சாட்சியத்தில், அ.சா.1, எதிரிகளை தெரியும் என்றும், 2012ம் வருடம் சமுத்திரப்பட்டியிலுள்ள பழனியாண்டவர் முருகன் கோயிலில் வைத்து 1ம் எதிரிக்கும்,

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.16 08:30:45 +0530

அ.சா.1க்கும் திருமணம் நடந்தததாகவும், திருமணத்திற்கு அ.சா.1க்கு 11 பவுன் நகையும், 1வது எதிரிக்கு 3 பவுன் நகையும், இருசக்கர வாகனம் மற்றும் பண்டபாத்திரங்கள் சீர்வரிசையாக கொடுத்தார்கள் என்றும், அவர்களுக்கு ஒரு பெண்குழந்தை உள்ளதாகவும், அ.சா.1 கருப்பாக இருப்பதால் 1ம் எதிரிக்கு பிடிக்கவில்லை என சண்டைபோட்டு பிரிந்துவிட்டார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**16)** அ.சா.5-ன் சாட்சியம் 1-ம் எதிரிக்கும், அ.சா.1-க்கும் நடந்த திருமணம் பற்றியும் 1-ம் எதிரிக்கு அ.சா.1-ஐ பிடிக்கவில்லை என சண்டை போட்டு பிரிந்து விட்டார்கள் என்று மட்டுமே சாட்சியம் அளித்துள்ளார். அவர் அ.சா.1-க்கு எதிரிகள் அடித்து கொடுமைப்படுத்தி கொலைமிரட்டல் விடுத்தது குறித்து எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை.

**17)** அ.சா.6 இந்திரன் தனது சாட்சியத்தில், அ.சா.1, எதிரிகளை தெரியும் என்றும், 5 அல்லது 6 வருடங்களுக்கு முன்பாக அ.சா.1க்கும் 1வது எதிரிக்கும் திருமணம் நடந்தது என்றும், திருமணத்தின்போது அ.சா.1க்கு அவரது பெற்றோர் 14 பவுன் நகையும், ஒரு இருசக்கர வாகனமும் மற்றும் பண்டபாத்திரங்கள் சீதனமாக கொடுத்ததாகவும், பிறகு அவர்களுக்கு பெண் குழந்தை பிறந்ததாகவும், பிறகு அ.சா.1ன் நடவடிக்கை சரியில்லை என்றும், கருப்பாக இருப்பதாகவும் அவர்களுக்குள் அடிக்கடி சண்டை போட்டுக்கொண்டிருந்தார்கள் என்றும், சண்டை போட்டு அ.சா.1ஐ பிறகு அவரது பெற்றோர் வீட்டில் கொண்டுவந்து விட்டுவிட்டுச்சென்றார்கள் என்றும், அது விசயமாக பஞ்சாயத்து நடந்ததாகவும், போலீசார் தன்னை விசாரித்தனர் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**18)** அ.சா.6-ன் சாட்சியம் 1-ம் எதிரிக்கும், அ.சா.1-க்கும் நடந்த திருமணம் பற்றியும் 1-ம் எதிரிக்கு அ.சா.1-ஐ பிடிக்கவில்லை என சண்டை போட்டு பிரிந்து விட்டார்கள் என்று மட்டுமே சாட்சியம் அளித்துள்ளார். அவர் அ.சா.1-க்கு எதிரிகள் அடித்து கொடுமைப்படுத்தி கொலைமிரட்டல் விடுத்தது குறித்து எவ்வித சாட்சியமும் அளிக்கவில்லை.

**19)** அ.சா.8 அம்பிகா தனது சாட்சியத்தில் கடந்த 15.02.2014 அன்று 14.30 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது ராஜலெட்சுமி என்பவர் மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திலிருந்து தொலைபேசி மூலம் தகவலை பெற்று பின்னர் காவல்நிலையம் வந்து புகார் கொடுத்ததன் பேரில் குற்ற எண்.10/16, பிரிவுகள் பெண்கள் துன்புறுத்தலை தடுக்கும் சட்டபிரிவு 4 மற்றும் இ.த.ச பிரிவு 506(1)-ன் கீழ் அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார் என்றும், பின்னர் முதல் தகவல் அறிக்கையுடன் புகாரினை

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.16 08:30:49 +0530

இனைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார் என்றும், பின்னர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராஜலெட்சுமி, ராமமூர்த்தி, மலேஸ்வரி, ஜெயராமன், இந்திரன், ராமசாமி, பஞ்சு ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், தனது புலன்விசாரணையில் 4-ம் எதிரி சபரி என்பவர் வழக்கு சம்பவத்தில் ஈடுபடவில்லை என தனது புலன்விசாரணையில் தெரியவருவதால் எதிரியை நீக்கம் செய்து 15.02.2016-ம் தேதி அ.சா.ஆ.3 எதிரி நீக்கல் அறிக்கை தாக்கல் செய்தார் என்றும், பின்னர் எதிரிகள் மீது 20.03.2016-ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**20)** எனவே இவ்வழக்கில் எதிரிகள் அ.சா.1-ஐ அடித்து மற்றும் அவருக்கு உணவு, உடை எதுவும் தராமல் அவரை கொடுமைப்படுத்தியதாகவும், எதிரிகள் அ.சா.1-ன் சேலையை கிழித்து வெளியே செல்ல இயலாதவாறு அடைத்து வைத்து அசிங்கமான வார்த்தைகளால் அ.சா.1-ஐ திட்டி கொடுமைப்படுத்தியதாக எந்தவொரு கண்ணுற்ற சாட்சியும் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தவில்லை. மேலும் இவ்வழக்கில் அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரிகள் எந்த வார்த்தைகளால் தன்னை திட்டி அதனால் தனக்கும், அங்கிருந்தவர்களுக்கும் அசௌகரியம் ஏற்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. இவ்வழக்கில் எதிரிகள் அ.சா.1-க்கு கொலைமிரட்டல் விடுத்ததாக எந்தவொரு சாட்சிகளையும் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தவில்லை. மேலும் இவ்வழக்கில் 1-ம் எதிரி வேறு திருமணம் செய்ததாகவோ அல்லது செய்ய முயற்சித்ததாகவோ எந்தவொரு சாட்சியமும் சாட்சியம் அளிக்கவில்லை. அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரிகள் துன்புறுத்தியதினால் தனது பெற்றோர் வீட்டிற்கு சென்றாரா அல்லது வளைகாப்பிற்காக சென்றாரா என்று அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை. எனவே இவ்வழக்கில் எதிரிகள் அ.சா.1-ஐ அசிங்கமாக திட்டி, கொடுமை செய்து, அடித்து வீட்டைவிட்டு வெளியேற்றினார்கள் என்றும், அ.சா.1-ஐயும், அவரது குழந்தையையும் கொன்றுவிடுவதாக கொலைமிரட்டல் விடுத்ததாகவும் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**21)** எனவே, இவ்வழக்கில் அரசு தரப்பில் 1 முதல் 4 எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே சந்தேகத்தின் பலனை 1 முதல் 4 எதிரிகளுக்கு அளித்து அவரை விடுதலை செய்வதுதான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்குமென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.16 08:30:54 +0530

**22)** முடிவாக, 1 முதல் 3 எதிரிகள் மீது பிரிவுகள் 506(i) இ.த.ச மற்றும் 4 of TNPHW Act-ன் கீழும், 4-ம் எதிரி மீது இ.த.ச பிரிவு 506(1)-ன் கீழும் சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை 1 முதல் 4 எதிரிகளுக்கு அளித்து 1 முதல் 3 எதிரிகள் பிரிவுகள் 506(i) இ.த.ச மற்றும் 4 of TNPHW Act-ன் கீழும், 4-ம் எதிரி இ.த.ச பிரிவு 506(1)-ன் கீழும் குற்றாவாளிகள் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து, குவிமுச பிரிவு 248(1)-ன் கீழ் 1 முதல் 4 எதிரிகளை விடுதலை செய்து, இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**23)** இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை.

**24)** மேலும் 1 முதல் 4 எதிரிகள் குவிமுச பிரிவு 437(A)ன் கீழ் எழுதிக்கொடுத்துள்ள பிணைப்பத்திரம் 6 மாதங்கள் முடிவடைந்த பின்பு தானாக ரத்தாகிவிடும்.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு நீதிமன்ற கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் இன்று 2026- ம் ஆண்டு மார்ச் மாதம் 16-ம் தேதி அவையறிய பகரப்பட்டது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.16 08:30:58 +0530

நீதித்துறை நடுவர்,
மேலூர்.

<u>இணைப்பு</u>

<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u> :-

| வரிசை எண் | விசாரிக்கப்பட்ட தேதி | சாட்சிகளின் பெயர்கள் |
|---|---|---|
| அ.சா.1 | 12.02.2018 | ராஜலெட்சுமி |
| அ.சா.2 | 12.02.2018 | ராமமூர்த்தி |
| அ.சா.3 | 12.02.2018 | மகேஸ்வரி |
| அ.சா.4 | 12.02.2018 | ஜெயராமன் |
| அ.சா.5 | 12.02.2018 | ராமசாமி |
| அ.சா.6 | 11.02.2019 | இந்திரன் |
| அ.சா.7 | 11.02.2019 | பஞ்சு |
| அ.சா.8 | 05.05.2025<br>16.12.2025 | அம்பிகா |

அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள் :-

| வரிசை எண் | குறியீடு செய்த சாட்சி | ஆவணங்களின் விபரங்கள் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | அ.சா.1 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | அ.சா.8 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3 | அ.சா.8 | எதிரிகள் நீக்கல் அறிக்கை |

அரசு தரப்பு சான்றுப்பொருட்கள்**:-** இல்லை

**1** முதல் **4** எதிரிகள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் - இல்லை

குறியீடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்**:** இல்லை

குறிப்பு

1) வழக்கு விசாரணைகாலத்தில், 1 முதல் 4 எதிரிகள் நீதிமன்ற பிணையிலிருந்துள்ளார்.

2) எந்தவொரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3) வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது

4) தீர்ப்பின் நகல், மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.16 08:31:02 +0530